**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.736/2010 வா.சா.1 சந்திரன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 27.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) என் கூடுதல் சாட்சிய வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு என் வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு என்னால் படித்து பார்த்து கையொப்பம் இடப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதனை படித்து உள்ளேன். 2ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் 5ம் பக்கத்தில் 11ம் பத்தியில் "*குறித்த வகை நிவாரண சட்டப்படி வாதிகள் கடந்த 1981 -ம் வருடம் கிரையம் பெறும் பொழுது ஏற்பட்ட உடன்படிக்கை ( உறுதிமொழியின்படி ) 3 வருட காலத்திற்குள் ஏற்றதை ஆற்றுக பரிகாரத்தின் கீழ் சொத்திற்கான கிரையத் தொகையை உரிய காலத்தில் செலுத்தி நான்கு வாதிகளும் அவர்கள் கோரும் இடத்தினை கிரையம் செய்து கொள்ளவில்லை*" என செய்துள்ள கட்சியை நான் என் சாட்சிய வாக்குமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல.

2) 26-10-1981 ல் நானும் பிற வாதிகளும் மேற்கண்டவாறு உறுதி மொழிப்பத்திரத்தை ஏற்படுத்தி கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல . நாங்கள் அவ்வாறு எந்த ஒரு ஆவணத்தையும் ஏற்படுத்தவில்லை. வா.சா.ஆ.1 கிரைய சாசனத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு மேற்படி உறுதி மொழிப்பத்திரத்தை ஏற்படுத்திவிட்டு தற்போது மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

3) வா.சா.ஆ. 4 ஆவணம் தொடர்புடைய அ.வ.எண். 15/2010 வழக்கில் நான் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அவ்வழக்கில் தாக்கல் செய்த வாதியின்

வழக்குரை பொய்யானது , பிரதிவாதிக்கு மிகுந்த மனவேதனை அளிப்பதும் , மோசடியாக புனையப்பட்டதும் ஆகும் எனவும் வாதி கோரிய பரிகாரங்கள் நிலைக்கத்தக்கதல்ல , சட்டப்படியும் , தர்ம நியாயப்படியும் கிடைக்கத்தக்கது அல்ல எனவும் என் அவ்வழக்கின் எதிர்வழக்குரையில் நான் கட்சி செய்துள்ளேன்என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ- 3 அடமான பத்திரம் பெயரளவில் ஆனது என்றும் நடைமுறைக்கு வராதது என்றும் அதன் பெயரில் நான் பணம் ஏதும் பெறவில்லை என்றும் வா.சா.ஆ. 3 அடமான பத்திரத்தை மறுத்து நான் அவ்வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அ.வ.எண். 15/2010 வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ-3 ஆவணம் ஏற்புடையது அல்ல என அவ்வழக்கில் கட்சி செய்துவிட்டு அதற்கு முரணாக இவ்வழக்கில் அதனை என் தரப்பு ஆவணமாக குறியீடு செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அவ்வாறு சாட்சியம் அளிக்க நான் முரண் தடைபட்டுள்ளேன் என்றும் அதனால் என் கூடுதல் சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

5) நான் அ.வ.எண். 15/2010 வழக்கின் எதிர்வழக்குரையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண். 15/2010 வழக்கில் எனக்கு ஆஜரான வழக்கறிஞரை அணுகி அவர் மூலம் தான் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அ.வ.எண். 15/2010 வழக்கின் எதிர்வழக்குரையை இவ்வழக்கில் தாக்கல் செய்யாததற்கு காரணம் அவ்வாறு தாக்கல் செய்தால் அது இவ்வழக்கிற்கு பாதகம் ஆகும் என்பதால் தான் என்றால் சரியல்ல.

6) வா.சா.ஆ. 5 பொது அதிகார ஆவணத்தில் அதிகாரம் கொடுப்பவர் மற்றும் அதிகாரம் பெறுபவர் ஆகிய இருவர் கையொப்பமும் இருக்க வேண்டும் என்றால் அப்போதைய நடைமுறையில் அதிகாரம் கொடுப்பர் கையொப்பமே போதுமானதாக கருதப்பட்டது. நான்

கிருஷ்ணசாமிக்கு அதிகாரம் கொடுத்தாக சொல்லும் வா.சா.ஆ. 5 பொது அதிகார ஆவணத்தின் அசலில் கிருஷ்ணசாமி கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 5 பொது அதிகார ஆவணத்தில் கொடுத்தாக சொல்லும் அதிகாரத்தை கிருஷ்ணசாமி ஒரு போதும் ஏற்கவில்லை என்றும் அதனால் அது செல்லத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

7) என் கூடுதல் சாட்சிய வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் இவ்வழக்கிற்காக திருத்தி சொல்லப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 3 அடமான பத்திரத்தில் அடமானம் கொடுப்பவர் மற்றும் அடமானம் பெறுபவர் ஆகிய இருவரின் கையொப்பமும் இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. வா.சாஆ. 3 அடமான பத்திரத்தில் மேற்சொன்னவாறு இருவர் கையொப்பம் இல்லாததால் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 3 முதல் வா.சா.ஆ. 5 ஆவணங்கள் சட்டப்படியானது அல்ல என்றும் அதன் படி வழக்கு பரிகாரம் கோர எங்களுக்கு அருகதை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1) வழக்குரையில் வா.சா.ஆ. 3 அடமான ஆவணத்தின் தேதியோ, ஆவண எண்ணோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் வா.சா.ஆ. 5 பொது அதிகார பத்திரம் தொடர்பாக வழக்குரையில் எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து கிரையம் பெற நாங்கள் எவ்வித செலவும் செய்யாததால் எங்களுக்கு அதன் மீது மூல உரிமையே இல்லாத நிலையில் வா.சா.ஆ. 3 மற்றும் வா.சா.ஆ .5 ஆவணங்கள் ஏற்படுத்த எனக்கு அருகதை இல்லை என்றும் அவை சட்டப்படி ஏற்புடையது அல்ல மற்றும் இல்லா நிலையது என்றும் சொன்னால் சரியல்ல.

2) அடமானத்தை 30 ஆண்டுகளுக்குள் மீட்டு எடுக்க நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் வா.சா.ஆ. 3 அடமான பத்திரம் சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. வா.சா. ஆ. 5 பொது அதிகார ஆவணம் தன்னிச்சையாக என்னால் ஏற்படுத்தப்பட்டது என்றும் அதன் பெயரிலும் அதன் மீதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் அது பெயரளவிலான ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 3 அடமான பத்திரத்தில் வா.சா.ஆ. 1 கிரைய சாசனம் மூல ஆவணமாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 அடமான பத்திரத்தில் அச்சொத்து பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் , பற்றும் இல்லாததால் தான் அதனை வா.சா.ஆ. 3 அடமான பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

3) பொது சொத்து வருமானத்தை கொண்டு தான் கிருஷ்ணசாமி சுற்றுசுவர் மற்றும் களம் அமைத்ததாக சொல்வது பொய் என்றும் வழக்கு சொத்து மேம்பாடுகள் அனைத்தும் கிருஷ்ணசாமியின் தனிப்பட்ட வருமானத்தில் செய்யப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி ஷாஜகான் என்பவருக்கு ஆதரவாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அறிவிப்பின் படி தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ. 1 கிரைய ஆவணம் வாதிகளை பொறுத்த வரையில் பெயரளவில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளிலோ இதர சொத்துகளிலோ வாதிகள் எவருக்கும் எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 3 அடமான பத்திரம் தொடர்பாக அ.வ.எண். 15/2010 வழக்கில் செய்த கட்சிக்கு முரணாக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) நான் எப்போது பிறந்தேன் என்றால் 26-01-1958 ல் பிறந்தேன். நான் 1981 ல் படித்து முடித்துவிட்டு வெளியூரில் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரியல்ல. உள்ளூரிலேயே

தொழில் செய்து வந்தேன். நான் சாட்சிய வாக்குமூலத்திலும் , கூடுதல் சாட்சிய வாக்குமூலத்திலும் கூறியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமி தான் வழக்கு மில்லை நடத்தி வழக்குசொத்தையும் , இதர சொத்துகளையும் அனுபவித்து பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**6,7 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

**( 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி